# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2394/39 - 2024 ජූලි මස 24 වැනි බදාදා - 2024.07.24

2394/39 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு யூலை மாதம் 24 ஆந் திகதி புதன்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி III - காணிகள்

### காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல.: RUW/LAN/ACQTN/A2/257.
காணி அமைச்சின் குறிப்பு இல.: 4-3/9/2017/WS/83.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக் கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

*பொது விடயம் என்னவென* :- ருவன்வெல்லை பிரதேச செயலாளர் பிரிவில் விஸல் ருவன்வல்லை நீர் விநியோகத் திட்டத்தில் 450 $M^3$ கொள்ளளவுடனான நீர்த் தாங்கிக்கு நுழைவு வீதியை நிர்மாணிப்பதற்காக காணித் துண்டொன்றை எடுத்தல்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

சப்பிரகமுவ மாகாணத்தின் கேகாலை மாவட்டத்தில் ருவன்வல்லை பிரதேச செயலாளர் பிரிவில் இல. 100 B - சியம்பலாவல கிராம அலுவலர் பிரிவில் சியம்பலாவல கிராமத்தில் அமைந்துள்ள நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட இல. 610436 மற்றும் 2024.04.30 ஆந் திகதிய கடத்திரல் அளவை வரைபடத்தில் விபரமாக காட்டப்பட்டுள்ள 0.0211 ஹெக்டயார் விஸ்தீரணத்தையுடைய கீழே குறிப்பிடப்பட்டுள்ள காணித் துண்டுகள்.

**1. காணித் துண்டு இலக்கம்: 1**
காணியின் பெயர்: பீட்டர்ஹில் தோட்டம்; உரிமை கோருவோர்: பி. தர்மலத்தா; விஸ்தீரணம்: 0.0029 ஹெக்டயார்.

**2. காணித் துண்டு இலக்கம்: 2**
காணியின் பெயர்: பீட்டர்ஹில் தோட்டம்; உரிமை கோருவோர்: அரசு, காணி அபிவிருத்தி கட்டளைகள் சட்டத்தின் கீழ் அனுமதிப் பத்திர இலக்கம் 507512 இன் மேல் ஆர். எம். சமித்த விராஜ் செனெவிரத்தின

என்பவரால் பயிர்ச்செய்கை செய்யப்பட்டுள்ளது; விஸ்தீரணம்: 0.0159 ஹெக்டயார்.

**3. காணித் துண்டு இலக்கம்: 3**

காணியின் பெயர்: பீட்டர்ஹில் தோட்டம்; உரிமை கோருவோர்: பி. தர்மலத்தா; விஸ்தீரணம்: 0.0015 ஹெக்டயார்.

**4. காணித் துண்டு இலக்கம்: 4**

காணியின் பெயர்: பீட்டர்ஹில் தோட்டம்; உரிமை கோருவோர்: அரசு, ஆர். எம். சிறில் அனுமதியின்றி குடியிருக்கின்றார்; விஸ்தீரணம்: 0.0008 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரிமை கோருகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2024 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 14 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு ருவன்வெல்லை பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும்படியும்,

மேலும், அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்ட ஈட்டுத் தொகையையும் அத்தொகை கணிக்கப்பட்ட விதத்தையும் 2024 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 30 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

எச். டி. எஸ். என். ஹெட்டிகே,
பிரதேச செயலாளர்,
ருவன்வெல்லை.

பிரதேச செயலகம்,
ருவன்வெல்லை,
2024, யூலை 17.

EOG 07 - 0234